**கவனிக்க.-** *03.03.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2010 - 2017 මාර්තු මස 10 වැනි සිකුරාදා - 2017.03.10

*2010 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 420 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 423 |


**கவனிக்க.-** (i) கடற்றொழில் நீர்வாழ் உயிரினவளங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு

அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்று அதிகார சேவை I ஆம் தரத்தில் அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017

அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்று அதிகார சேவை I ஆம் தரத்தில் அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் பணிப்பாளர் தற்பொழுதுள்ள வெற்றிடத்திற்குத் தகுதியான ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக அமைச்சரவையின் கட்டளைப்படி, இலங்கை விஞ்ஞான சேவையில் உள்ள தகுதியான அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், கைத்தொழில் மற்றும் வாணிபம் பற்றிய அமைச்சு, த. பெ. இல. 570, இல. 73/1, காலி வீதி, கொழும்பு 03" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரும் இறுதித் தினம் 2017.03.30 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமொன்றோ அல்லது அது தொடர்பான கடிதமொன்றோ தபாலில் காணாமல் போயுள்ளதென அல்லது காலதாமதமாகியுள்ளதென செய்யப் படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பப்படிவத்தைக் காலதாமதம் செய்வதால் ஏற்படும் இழப்பை விண்ணப்பதாரியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1. **பதவிக்குச் சேர்த்துக்கொள்ளும் முறை**.- அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலம் வழங்கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

2. **பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(அ) இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும்.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1877/27 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவை பிரமாணக் கோவை மற்றும் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டுள்ளது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றுநிருப இல. 03/2016 எனும் சம்பள சுற்றுநிருபத்திற் கேற்ப SL-1-2016, ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 எனும் சம்பள அளவுத்திட்டம் உரித்தாவதோடு, அதன் 20 ஆவது சம்பளப் படிமுறையில் நிறுவப்பட்டு அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கேற்ப நியமனம் வழங்கும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. **தகைமைகள்** :

4.1 **கல்வித் தகைமைகள்** :

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து பௌதிக விஞ்ஞானம் பற்றிய விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) அளவியல் அல்லது அளவீட்டு விஞ்ஞானம் (Metrology or Measurement Science), கருவிகள் தயாரிக்கும் விஞ்ஞானம் (Instrumentation Science), பௌதிக அளவீடுகளை அளத்தல் (Measuring of Physical Quantities), கைத்தொழில் தன்னியக்க செயற்பாடு (Industrial Automation), பிரயோக இலத்திரனியல் (Applied Electronics), இலத்திரனியல் மற்றும் கருவிகள் உருவாக்கும் விஞ்ஞானம் (Electronics and Instrumentation), பிரயோக அளவீடு அல்லது அளவீட்டு விஞ்ஞானம் (Applied Metrology or Measurement Science), பிரயோக பௌதிக விஞ்ஞானம் (Applied Physics), உயர் ஒளியியல் தொழில்நுட்பம் (Advanced Optical Technology), போட்டோனிக்ஸ் விஞ்ஞானம் (Photonics), புலன் வலை

யமைப்பு (Sensor Network), அளவீட்டு தொழில்நுட்பம் (Measurement Technology), இயந்திர தொழில்நுட்ப விஞ்ஞானம் (Mechtronics) ஆகிய துறைகளிலொன்றில் உரிய அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பெற்றிருத்தல்.

4.2 ***தொழில் தகைமைகள் :***

(அ) இலங்கை விஞ்ஞான சேவையில் I ஆம் தர அதிகாரியாய் இருத்தல் ;

(ஆ) பதவியில் சேர்த்துக்கொள்ளப்படும் திகதியன்று ஆகக்குறைந்தளவு ஐந்து (5) வருடங்கள் தீவிரமாக மற்றும் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு விதிமுறைகளுக்கேற்ப பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் ஏழு (7) வருடங்கள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேல் செயற்றிறன் காண்பித்திருக்க வேண்டும்.

5. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **ஏனைய தகைமைகள்** :

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகத் தேவைப்படும் அனைத்துத் தகைமைகளும் பூரணப்படுத்தியிருக்க வேண்டுமென விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறுதித் திகதியன்று அத்தகைமைகளைச் சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **பொது நிபந்தனைகள்**.- இதுவரை வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் அரச சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகள், அரச சேவை தொடர்பாக வெளியிடப்படும் அனைத்துச் சுற்றுநிருபங்கள் மற்றும் அமைச்சரவையின் நிறைவேற்றதிகார சேவை I ஆம் தரத்திற்கமைவாக ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இதற்குப் பொருந்தும்.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சிந்தக்க எஸ். லொக்குஹெட்டி,
செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள்
அமைச்சு.

கைத்தொழில் மற்றும்
வணிக அலுவல்கள் அமைச்சு,
73/ 1, காலி வீதி,
கொழும்பு 03,
2017, மாச்சு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றதிகார சேவை I ஆம் தரத்தில் அளவீட்டு அலகு, தரம் மற்றும் சேவைகள் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்**

இல. : [   ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தொலைபேசி இலக்கம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் :----.

7. பிறந்த திகதி :----.

8. திருமணமானவரா/ திருமணமாகாதவரா என்பதைப் பற்றி :----.

9. தற்பொழுது சேவையாற்றும் அமைச்சு/ திணைக்களம் :----.

10. இலங்கை விஞ்ஞான சேவையில் தற்பொழுது வகிக்கும் பதவி மற்றும் தரம் :----.

11. அமைச்சில் அல்லது திணைக்களத்தில்-

(அ) இலங்கை விஞ்ஞான சேவையின் பதவிக்கு முதன் முதலாக நியமிக்கப்பட்ட திகதி :----.
(ஆ) இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் தர பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

12. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் 4 ஆவது பந்திக்கேற்ப உரிய கல்வித் தகைமைகள் :----.

13. கல்வித் தகைமைகள் :

(அ) (i) பௌதிக விஞ்ஞானம் (விசேட) பட்டதாரி பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
வெளிவாரி/ உள்ளக :----.
கற்றுக்கொண்ட பாடங்கள் :----.

(ii) பட்டப்பின் படிப்பு :----.
செல்லுபடியாகும் திகதி :----.
பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(ஆ) ஏனைய பட்டப் படிப்புகள்/ பட்டப்பின் படிப்புகள் :----.
செல்லுபடியாகும் திகதி :----.
பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

திரு./ திருமதி/ செல்வி ........................................ ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையெனவும் மற்றும் சரியானது எனவும் கூறுகிறேன். அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டு அல்லது கருணை மாற்றீடாக செயற்றிறனின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது அல்லது வழங்கப்படவில்லை எனவும், பதவியைக் கைவிட்டுச் சென்றவராகக் கருதப்பட்டவரல்ல என்றும் உறுதியுரை பகர்கிறேன். இங்கு அடங்கியுள்ள விடயங்களில் ஏதாகிலும் உண்மையல்லவென அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின் நான் தகைமையற்றவரெனக் கருதப்படுவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான ஒரு நிலை தெரியவரின் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது தொழிலிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரிகளுக்காக வழங்கப்படும் அமைச்சுச் செயலாளரின்/ திணைக்களப் பிரதானியின் சான்றுரை

திரு./ திருமதி/ செல்வி ............................................. என்பவர், தற்பொழுது .............................. அமைச்சில்/ திணைக்களத்தில் ............................ ஆக சேவை செய்கிறார் என்றும், விண்ணப்பதாரியால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 9, 10, 11 மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அல்லது ஒழுக்காற்று விசாரணை நடைபெறுகின்றது/ நடைபெறவில்லை எனவும், விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு விதிமுறைகளுக்கேற்ப ஆகக்குறைந்தளவில் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயற்றிறன் காண்பித்துள்ளார்/ காண்பிக்கவில்லை எனவும், உரிய சம்பள உயர்வைப் பெற்றுள்ளார்/ பெறவில்லை எனவும், அல்லது குறைந்த சம்பளத்துடன் விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளார்/ பெற்றுக்கொள்ளவில்லை எனவும், விண்ணப்பதாரியின் கடமை, வரவு, நடத்தை, செயற்றிறன் திருப்திகரமானது/ திருப்திகரமானதல்ல எனவும் சான்று பகர்கிறேன்.

திரு./ திருமதி/ செல்வி ....................................................... இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால், அவரை பிரதியீட்டுடன்/ பிரதியீடின்றி விடுவிக்க முடியுமென/ முடியாதென இத்தால் அறியத்தருகிறேன்.

----,
அமைச்சுச் செயலாளர்/
திணைக்களப் பிரதானியின்
கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

3-805

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**இலங்கை நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Administrative Service - 2015(2016) Stage II

*2017.02.17 ஆந் திகதிய 2007 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி I : தொகுதி II(அ) வில் பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் என்னும் தலைப்பின்கீழ் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 4.(i) (அ) வில் "2016.07.10 ஆந் திகதியிலுள்ளவாறு வயது" என்பது, "2016.07.01 ஆந் திகதியிலுள்ளவாறு வயது" என திருத்தி வாசிக்கப்பட வேண்டும்.*

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
2017, பெப்புருவரி 28.

3-892

---

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

வன பரிபாலனத் திணைக்களம்

**வன பரிபாலனத் திணைக்களத்தின் பகுதி வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

வன பரிபாலனத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பகுதி வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த, 31.03.2017 அன்று கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. **சம்பள அளவுத்திட்டம் :**

(i) MN I – 2016 பொ.நி.சு. 03/2016 இற்கு அமைவாக ரூ. 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூ. 45,540 ஆகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

(iii) பகுதி வன உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதிகளிலுள்ள அபாயமான பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் வனக் குற்றங்கள் தொடர்பாக எந்நேரத்திலும் அவதானமாயிருப்பதுடன் குற்றவாளிகளைக் கைது செய்து, உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நாட்டின் எப்பிரதேசத்திலும் எந்தவொரு நிலைமையிலும் பணிக்கப்படும் பிரகாரம் பணியாற்றுவதற்கும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(iv) வர்த்தமானி அறிவித்தலில் 2 வது பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும்போது இயைபுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(v) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. **வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 31.03.2017 அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.1 ***கல்வித் தகைமைகள்.***- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் கல்வித் தகைமைகளை திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (சா. த.) தரப் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (உ. த.) தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (1) பாடத்தில் (வழமையான பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2 ***தொழில்சார் தகைமைகள்.***- குறிப்பிட்ட துறையில் பெற்ற தொழிற்தகைமைகள் சிறப்பு தகைமைகளாக கொள்ளப்படும்.

4.3 ***பௌதிகத் தகைமைகள் :***

(i) ஆண் விண்ணப்பதாரர்களின் உயரம் ஆகக்குறைந்தது 5 அடி 2 அங்குலமாகவும் மார்பு 32 அங்குலமாகவும் இருத்தல் வேண்டும்.

(ii) பெண் விண்ணப்பதாரர்களெனின் உயரம் ஆகக்குறைந்தது 5 அடியாக இருத்தல் வேண்டும்.

(iii) எல்லாப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 ***மேலதிக தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரி ஒரு இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தேவைப்படும் அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படுகின்ற திகதியன்று எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம் :**

(i) விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கைக்கு இரண்டு மடங்கு எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துமூலப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற / உள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) எழுத்துமூல பரீட்சை, இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும். இப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

| | |
|---|---|
| உளச்சார்பு | காலம் - 1 மணித்தியாலம், புள்ளிகள் - 100 |
| | இவ் வினாத்தாள் ஐம்பது (50) பல்வகை தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும் விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் விவேகத்தையும் பகுப்பாய்வையும் தீர்மானிக்கும் வகையில் சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் வினாக்களைக் கொண்டதாகவும் அமையும். (எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |
| தொழில்நுட்ப வினாத்தாள் | காலம் - 2 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 |
| | இவ் வினாத்தாள் கட்டமைப்பு வினாக்கள், பகுதிக் கட்டமைப்பு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.<br>• வன வளங்கள் மற்றும் விலங்கினங்கள் மீது காலநிலை மற்றும் வானிலை விளைவுகள் சம்பந்தமான அறிவு.<br>• இலங்கையின் சூழல் நிலைமைகள், புவியியல் முக்கியத்துவம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்.<br>• இலங்கையின் பாரம்பரிய மற்றும் நவீன விவசாய பொருளாதாரம் பற்றிய அறிவு.<br>• மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு சம்பந்தமான முக்கிய விடயங்கள் மற்றும் வனபரிபாலனத் திணைக்களமும் அதன் நோக்கம் மற்றும் குறிக்கோள்.<br>• இயற்கை சூழல், காடுகள் மற்றும் தாவரங்கள் சம்பந்தமான அறிவு.<br>• காடுகளுக்கும் மக்களுக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளின் முக்கியத்துவம் தொடர்பான அறிவு.<br>• புவியியல் சம்பந்தமான அடிப்படை அறிவு (பூமியின் வடிவம், உள்நாட்டு, மண்டல புவியியல் அம்சங்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் மற்றும் அமைவிடம், பொது அறிவு) |

6. **விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும் :**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு 21 x 29 செ. மீ. (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பப்படிவங்கள் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை விண்ணப்பதாரி தமது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பகுதி வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2016(2017)" எனக் குறிப்பிட்டு 31.03.2017 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது)

(ii) பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப்பத்திரங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப்படும்.

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் எதுவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(iv) ஏற்கனவே அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது நிறுவனத்தின் / திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதை கட்டாயம் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(v) இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vi) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

7. **பரீட்சைக் கட்டணங்கள் :**

(i) பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைத்து 31.03.2017 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப்பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும் (இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும்). பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ii) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

8. பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்)
(iv) நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(v) உரிய பிற சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

9. **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும் :**

(i) பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம், அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும்.

ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு விண்ணப்பிக்காதவிடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியான 31.03.2017 அன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள மற்றும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்தினூடாக கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும்

தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

(v) எழுத்துப் பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 40% என இரண்டு வினாத்தாள்களுக்கும் பெறுபேற்றினை பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் பெறுபேறுகளின் முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்ட பெறுபேற்றினைக் கொண்ட அட்டவணை ஒன்று காடு பேணுநர் தலைமையதிபதிக்கு வழங்கப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்டரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

10. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

11. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் 2,40,360 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது பிற மதங்களின் மத ஸ்தானங்களுக்கு பொறுப்பாகவுள்ள மதத் தலைவர்களாக கருதக்கூடிய நிலையிலுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

12. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எஸ். ஏ. சத்துருசிங்ஹ,
காடு பேணுநர் தலைமை அதிபதி.

வன பரிபாலனத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வன பரிபாலனத் திணைக்களத்தின் பகுதி வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination for Recruitment to the Post of Beat Forest Officer of the Forest Department – 2016 (2017)

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம்

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைய பூர்த்தி செய்யவும்.)

01. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

02.
(i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உதாரணம்: GUNAWARDHANA.M.G.B.S.K
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

03.
(i) தபால் மூலம் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

04. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

06.
(i) பிறந்த திகதி :
ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |
(ii) 31.03.2017 அன்று வயது :
வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

07. பிரசாவுரிமை :
பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

08. தொலைபேசி இல. : | | | | | | | | | | |

09. பௌதிகத் தகைமைகள் :

(i) உயரம் :----.
(ii) மார்பு :----. அங்குலம் (பெண் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது.)

10. கல்வித் தகைமைகள் :

(i) க.பொ.த. சாதாரண தரம் :

1 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க.பொ.த. (உ.த) பரீட்சை :

1 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(iii) மேலதிக கல்வித் தகைமைகள் :----.

11. தொழில்சார்/ மேலதிக தகைமைகள் :----.

12. (i) பரீட்சைக்கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கமும் செலுத்தப்பட்ட திகதியும் :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

13. (i) தங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக்காகவோ நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா ? : ஆம்/ இல்லை
(ii) ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக :----.

14. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் :----.

(i) நிறுவனம் :----.
(ii) பதவி :----.
(iii) முதல் நியமனத் திகதி :----.
(iv) சம்பளம் :----.

15. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) :----.
(ii) :----.

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னர் இவ்வாறு தெரியவருமிடத்து நட்டஈடு இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துவதும் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர் முன்னிலையில்
கையொப்பமிடுதல் வேண்டும்)

திகதி :----.

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2017,................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை)

18. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக்களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்தி செய்யப்படல் வேண்டும் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .............................................. இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் ............................................. ஆக நிரந்தர/தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து இந்தத் திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்கமுடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத்தலைவர் அல்லது அவரினால்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(இலச்சினையை இடுக.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு/ ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்கள் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

**அட்டவணை I**

*பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர எண்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

3-327

---

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

வன பரிபாலனத் திணைக்களம்

**வன பரிபாலனத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

வன பரிபாலனத் திணைக்களத்தின் வன வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதி வாய்ந்த, 31.03.2017 அன்று கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. **சம்பள அளவுத்திட்டம் :**

(i) PL2 – 2016 பொ.நி.சு. 03/2016 அமைவாக ரூ. 25,250 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூ. 38,450 ஆகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

(iii) வட்டார வன உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் பகுதி வன உத்தியோகத்தரின் உதவியுடன் வன வெளிக்கள உதவியாளரின் பிரிவுகளுக்குட்பட்ட காடுகளை பாதுகாத்தல் சம்பந்தமான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தல், வனக் குற்றங்கள் சம்பந்தமாக அவதானமாயிருத்தல், குற்றவாளிகளை கைது செய்தல் மற்றும் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவை வன வெளிக்கள உதவியாளரின் கடமைகளாகும்.

(iv) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் காட்டைப் பாதுகாத்தல், வனக்குற்றங்களை விசாரணை செய்தல், குற்றவாளிகளை மற்றும் வன தயாரிப்புக்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தல் போன்ற கடினமான கடமைகளை உயர் அதிகாரியுடன் இணைந்து செயற்படுத்துதல் வேண்டும். அத்துடன் பல சமயங்களில் இச் செயற்பாடுகளை பொது விடுமுறை நாட்களிலும் இரவு நேரங்களிலும் தனித்து செயற்படுத்த எப்போதும் தயாராயிருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட வன வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்புக்கள் கடினமாக இருப்பதால் இந் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பெண்களுக்கு நடைமுறையில் கடினமாகவிருக்கும்.

(v) வர்த்தமானி அறிவித்தலில் 2 வது பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும்போது இயைபுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(vi) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் கல்வித் தகைமைகளை திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (சா. த.) தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது 2 திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட மற்றும் பதவியுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி 2 மட்டத்திலான தகைமையைக் கொண்டிருத்தல்.

(iii) ஆண் விண்ணப்பதாரர்களின் உயரம் ஆகக்குறைந்தது 5 அடி 2 அங்குலமாகவும், மார்பு 32 அங்குலமாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) பெண் விண்ணப்பதாரர்களினின் உயரம் ஆகக்குறைந்தது 5 அடியாக இருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பதாரிகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருப்பதுடன் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்** :

(i) மேலே 2 ஆம் பந்தியின் கீழ் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கைக்கு இரண்டு மடங்கு எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துமூலப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் அடிப்படையில் நிலவுகின்ற 105 வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

(ii) மேலே 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள/ நிலவுகின்ற இறுதி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் சிலர் இருப்பின் அப்புள்ளியை விட அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

(iii) மேலே 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 3 வருடத்திற்குள் மரங்களை இனங்காணும் பரிசோதனையில் (மத்திய தரம்) சித்தியடைதல் வேண்டும் என்பதுடன் மரங்களை இனங்காணும் பரிசோதனையில் சித்தியடைந்ததன் பின்னர் மூன்று (3) வருட திருப்திகரமான சேவைக்காலத்தின் பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.

6. **பாடவிதானம்**.- எழுத்துமூல பரீட்சை, இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(i) விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். இவ் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01 | உளச்சார்பு | காலம் - 1 மணித்தியாலம், புள்ளிகள் - 100 |
| | | இவ் வினாத்தாள் விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் விவேகத்தையும் பகுப்பாய்வையும் தீர்மானிக்கும் வகையில் அமையும் ஐம்பது (50) பல்வகை தேர்வு வினாக்களைக்களையும் சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் வினாக்களைக் கொண்டதாகவும் அமையும். (எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |
| 02 | தொழில்நுட்ப வினாத்தாள் | காலம் - 2 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100 |
| | | வன வளங்கள் மற்றும் உயிரினங்களில் இதன் விளைவுகள் பற்றிய அறிவு, இலங்கையின் சூழலியல், புவியியல் முக்கியத்துவம், இலங்கையின் விவசாயப் பொருளாதாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு சம்பந்தமான முக்கிய விடயங்கள், வனபரிபாலனத் திணைக்களமும் அதன் நோக்கம் மற்றும் குறிக்கோள், இயற்கை சூழல் சம்பந்தமான அறிவு, காடுகள் மற்றும் தாவரங்கள், காடுகளுக்கும் மக்களுக்குமிடையிலான முக்கிய நெருங்கிய தொடர்புகள், புவியியல் சம்பந்தமான அடிப்படை அறிவு (பூமியின் வடிவம் மற்றும் முக்கிய அம்சங்கள்), மற்றும் விண்ணப்பதாரியின் பொது அறிவு சம்பந்தமான விடயங்கள் மதிப்பீடு செய்யப்படும்.<br>(எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

7. **விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்** :

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்தபக்கத்திலும் உள்ளடக்கியவாறு 21 x 29 செ. மீ. (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பப்படிவங்கள் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை விண்ணப்பதாரி தமது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வன வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016(2017)' எனக் குறிப்பிட்டு 31.03.2017 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப்பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு' என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது)

(ii) பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப்பத்திரங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப்படும்.

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் எதுவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணைபெற்றஉத்தியோகத்தர் 2,40,360 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது பிற மதங்களின் மத ஸ்தானங்களுக்கு பொறுப்பாகவுள்ள மதத் தலைவர்களாக கருதக்கூடிய நிலையிலுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(v) இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

(vi) ஏற்கனவே அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது நிறுவனத்தின் / திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

8. **பரீட்சைக் கட்டணம் :**

(i) பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைத்து 31.03.2017 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப்பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும் (இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும்). பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்

(ii) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்) ;
(iv) நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(v) உரிய பிற சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

10. **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும் :**

(i) பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம், அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும்.

ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு விண்ணப்பிக்காதவிடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை

நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியான 31.03.2017 அன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்தினூடாக கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும் போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

11. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்**.- தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணி நீக்கத்திற்கு உட்படுவார்.

13. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எஸ். ஏ. அனுர சத்துருசிங்ஹ,
காடு பேணுநர் தலைமை அதிபதி.

வன பரிபாலனத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வன பரிபாலனத் திணைக்களத்தின் பகுதி வெளிக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination for Recruitment to the Post of Forest Field Assistant of the Forest Department – 2016 (2017)

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைய பூர்த்தி செய்யவும்.)

01. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

02. (i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம்: GUNAWARDHANA.M.G.B.S.K
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

03. (i) தபால் மூலம் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

04. பால் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

06. (i) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ii) 31.03.2017 அன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

07. பிரசாவுரிமை :

பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக)

08. தொலைபேசி இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

09. பௌதிகத் தகைமைகள் :

(i) உயரம் :----.
(ii) மார்பு :----. அங்குலம் (பெண் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது.)

10. கல்வித் தகைமைகள் :

(i) க.பொ.த. சாதாரண தரம் :

1 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது தடவை
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) மேலதிக கல்வித் தகைமைகள் :----.

11. தொழில்சார்/ மேலதிக தகைமைகள் :----.

12. (i) பரீட்சைக்கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கமும் செலுத்தப்பட்ட திகதியும் :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

13. (i) தங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக்காகவோ நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை :----.
(ii) ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக :----.

14. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் :----.

(i) நிறுவனம் :----.
(ii) பதவி :----.
(iii) முதல் நியமனத் திகதி :----.
(iv) சம்பளம் :----.

15. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) :----.
(ii) :----.

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பப்படிவம் இரத்து

செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னர் இவ்வாறு தெரியவருமிடத்து எந்தவித நஸ்ட ஈடும் இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவதும், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்)

திகதி :----.

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி.............................. என்பவரை நான், தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2017,............................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை)

18. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியரின் திணைக்களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................. இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் ............................................ ஆக நிரந்தர/தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து இந்தத் திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்கமுடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத்தலைவர் அல்லது அவரினால்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(இலச்சினையை இடுக.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு/ ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்கள் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலாகாது

**அட்டவணை I**

*பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர இலக்கங்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

3-328

---

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கள நிலை/அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016 (2017)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கள நிலை / அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குததகைமை பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் பொதுவான நேர்முகப் பரீட்சைப் பெறுபேறு என்பனவற்றிற்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும்விண்ணப்பதாரிகள் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

3. வெற்றிடங்களின் எண்ணிக்கை 12 ஆகும். சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு. நியமனம் அமுல்படுத்தப்படும் திகதியை அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கமைய, இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 34,605-10 x 660 - 11 x 755 - 15 x 930 – ரூபா 63,460 (MN 5-2016) ஆகும். அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இற்கமைய இப் பதவியில் நியமிக்கப்படுபவர்களுக்கு சம்பளம் செலுத்தப்படும். (உ - ம் : 2017.01.01 ஆம் திகதி முதல் 2017.12.31 ஆம் திகதி வரை ஏற்புடையதாகும் சம்பளம் ரூபா 23,874 அடிப்படைச் சம்பளமும் ரூபா 6,190 சீர்படுத்துகை படியுமாகும்)

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். எவ்வாறாயினும் ஒரு வருட கால வேலை பார்க்கும் காலத்திற்கு உட்பட்டதாகும். முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கமைய அரச கரும மொழிகள் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **தகைமைகள் :**

6.1 ***கல்வித் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். பட்டப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் நபர்களுக்கு விண்ணப்பிக்க முடியாது.

6.2***அனுபவம்.***- சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இப் பதவியுடன் தொடர்புடைய உத்தியோகத்தராக அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தராக 05 வருடங்களுக்கு குறையாத முனைப்பான, திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் சிறிய தொழில் முயற்சிகள் துறை பற்றிய அறிவைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

6.3 ***உடற் தகைமைகள்.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் அலுவல்களை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நன் நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) முந்திய(கடந்த) தொடர்ந்து 05 வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் /வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்தத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.5 ***வயதெல்லை.***- ஏற்புடையதாகாது

7.

7.1 ***ஆட்சேர்ப்பு முறை.***- எழுத்துப் பரீட்சையில் ஒரு பாடத்திற்கு 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7.2 ***பரீட்சை முறை :***

(i) பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

(ii) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

(iv) பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

7.3 ***பரீட்சைக்கான பாடங்கள்.***- எழுத்துப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| பாடம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. கிரகித்தல் | 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40% |
| 02. நுண்ணறிவுச் சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 40% |

*7.4 **பாட விதானம்**.- கிரகித்தல்.- எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.*

(i) *முயற்சியாண்மை(தொழில் முயற்சிகள்) ஆற்றல் கொண்டவர்களை அடையாளங் கண்டு அவர்களை சிறியதொழில் முயற்சிகள் துறையில் ஈடுபடுத்தல்.*

(ii) *சிறிய மற்றும் நுண்பாகவர்த்தகம் தொடர்பான அறிவு.*

(iii) *தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் ஏனைய நிதி மற்றும் துணைச் சேவைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்.*

(iv) *இளைஞர், யுவதிகளை தொழில் முயற்சித் துறைக்காக ஊக்கப்படுத்தல், அவர்களிடத்தில் மனப்பாங்கு ரீதியிலான மாற்றத்தினை ஏற்படுத்தல் மற்றும் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.*

(v) *வர்த்தகத் தகவல்களை சேகரித்தல் மற்றும் தேவையானவர்களுக்கு தகவல்களை வழங்குதல்.*

*__நுண்ணறிவுச் சோதனை__.- பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிக்க வேண்டிய 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.*

*வாக்கியங்கள், எண்ணிக்கை மற்றும் உருவ அமைப்புக்கள் ஊடாக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் முடிவுகள் மற்றும் பிரதிபலிப்புகளை பரீட்சிப்பதன் மூலம் விண்ணப்பதாரிகளின் புரிந்துகொள்ளும் ஆற்றல் மற்றும் நுண்ணறிவைச் சோதனை செய்வதனையே எதிர்பார்க்கப்படுகின்றது.*

*8.*

*8.1 **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா1,200 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு மாத்திரம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (அதன் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும்) பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தினாலும் மீளச் செலுத்தப்படவோ பிறிதொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.*

*8.2 **பரீட்சை பெறுபேறுகள்**.- இந்த அறிவித்தலில் 7.3 ஆம் பந்திக்கமைய எழுத்து மூலப் பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்படும் பெறுபேறுகள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பெற்றுக் கொடுக்கப்படும். எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறு பேறுகள் தனிப்பட்ட வகையில் தபாலில் அனுப்பி வைக்கப்படும். அல்லது* www.results.exams.gov.lk *எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.*

*9. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப் படிவம்* A4 *(22x29செ.மீ.) (சாதாரண ஹார்ப்சீட்) அளவிலான தாளைப் பயன்படுத்தி,*

(i) *இலக்கம் 01 – 03 பந்திகளை முதலாவது பக்கத்திலும்*

(ii) *இலக்கம் 04 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கங்களில் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பப் பத்திரத்தை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.*

(iii) *மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்படாத மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவானதா என்பதனை விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.அவ்வாறில்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக்கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயரை சிங்கள*

மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

iv. உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

10. பரீட்சைக்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2017.04.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்குபதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2016 (2017)" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

11. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்தில் பணி புரியும் விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை அந்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாகவும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், தாம் வசிக்கும் பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ஒன்றிணைந்தவருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் போன்றோரில் ஒருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதிப் பத்திரத்தை அனுப்பிவைப்பார். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடனேயே அது பற்றி செய்திப் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களுக்குப் பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அது சம்பந்தமாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அந்த விபரங்களுடன் தொலைநகல்(பெக்ஸ்) மூலமாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்பிவைப்பதன் ஊடாக வினவுதல் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்வதற்காக தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பியபோது வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தம்மிடம் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.

13. பரீட்சாரத்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக உண்மையான தகவல்களையே வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய எவரேனுமொரு

விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதெனத் தெரியவரும்போது அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்ய முடியும். விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படல் கூடாது. பரீட்சையை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டியேற்படும்.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொது சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

எம். ஐ. எம். ரபீக்,
செயலாளர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கள நிலை/அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Limited Competitive Examination for Recruitment to the Post of Entrepreneurship Development Training Officer – Grade II, in Field / Office Category 2 in the Ministry of National Policies and Economic Affairs- 2016(2017)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

*அலுவலை மேற்கொள்ளும்போது தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மொழி ஊடகம்

சிங்களம் - 2
தமிழ் - 3

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

1.

1.1 முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக குறிப்பிடப்படும் பெயரை ஆரம்பத்திலும் முதலெழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம்: GUNAWARDHANA, H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.

2.1 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
2.5 பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2.6 கையடக்கத் தொ.பேசி இல. :----.

3.

3.1 தற்போது வகிக்கும் பதவி :----.
3.2 அப் பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.
3.3 தற்போதைய பதவிக்குரித்தான சேவை மற்றும் தரம் :----.
3.4 திணைக்களம்/ நிறுவனம் :----.

4.

4.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.2 2017.04.11 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4.3 சிவில் அந்தஸ்து :
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

6. பட்டம் பற்றிய விபரம் :

(i) பட்டம் :----.
(ii) பல்கலைக்கழகம் :----.

7. தொழில் தகைமைகள்:

i. :----.
ii. :----.
iii. :----.

08. நீங்கள் குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டில் √ அடையாளத்தை இடவும்)

('ஆம்' எனில், விபரத்தைக் குறிப்பிடவும்) :----.

9. பரீட்சைக் கட்டணம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கம், திகதி :----.
(iii) செலுத்திய தொகை ரூபா :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச் சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்) |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதியை பூரணப்படுத்தாமல் மற்றும் /அல்லது தவறான முறையில் பூரணப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும், இதில் சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டால் பணி நீக்கத்திற்கு ஆளாகுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றிக்கொள்ள மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் எனவும், அந்த வைப்புச் சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................................................... இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் ................................... எனும் பதவியில் பணியாற்றுகின்றார் எனவும், 2016.12.31 ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) அவருக்குரிய சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும், கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) அவர் உட்படுத்தப்படவில்லை என்றும், வர்த்தமானி அறிவித்தலின் 06.4பந்திக்கமைய, ஐந்து வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும், அவர் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இப் பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

**குறிப்பு**.- அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ஒன்றிணைந்த வருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3-423/1

---

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் கள நிலை /அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கள நிலை / அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் தொழில்சார் நிபுணத்துவப் பரீட்சைப் பெறுபேறு என்பனவற்றிற்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள். (எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடையே திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் இருமடங்கு விண்ணப்பதாரிகள் தொழில்சார்நிபுணத்துவப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.)

3. வெற்றிடங்களின் எண்ணிக்கை 49 ஆகும். சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு. நியமனம் அமுல்படுத்தப்படும் திகதியை அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கமைய, இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 34,605-10 x 660 - 11 x 755 - 15 x 930 – ரூபா 63,460 (MN 5-2016)ஆகும். அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இற்கமைய இப் பதவியில் நியமிக்கப்படுபவர்களுக்கு சம்பளம் செலுத்தப்படும். (உ - ம் : 2017.01.01 ஆந் திகதி முதல் 2017.12.31 ஆந் திகதி வரை ஏற்புடையதாகும் சம்பளம் ரூபா 23,874 அடிப்படைச் சம்பளமும் ரூபா 6,190 சீர்படுத்துகை படியுமாகும்)

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப் பதவி மூன்று வருட (03) கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கமைய அரச கரும மொழிகள் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **தகைமைகள் :**

6.1 ***கல்வித் தகைமைகள்.***- முயற்சியாண்மை, பொருளியல், வணிகம், முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், சமூக விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், தகவல் தொழில்நுட்பம்,விவசாய விஞ்ஞானம் அல்லது முயற்சியாண்மை, முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் போன்ற துறைகள் உள்ளடக்கப்படும் பாடங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு வருட கால பட்டப் பாடநெறியில்சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். பட்டப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் நபர்களுக்கு விண்ணப்பிக்க முடியாது

6.2 ***உடற் தகைமைகள்.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் அலுவல்களை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.3 ***ஏனைய தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நன் நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்தத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1996.04.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1982.04.11 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரம் இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்)

8.1 ***ஆட்சேர்ப்பு முறை.***- எழுத்துப் பரீட்சை 2017, யூன் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

8.2 ***பரீட்சை முறை :***

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

(iii) பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

8.3 **பரீட்சைக்கான பாடங்கள்.**- எழுத்துப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| *பாடம்* | *காலம்* | *உச்சப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. கிரகித்தல் | 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40% |
| 02. நுண்ணறிவுச் சோதனை | 01 மணித்தியாலம் | 100 | 40% |

8.4 ***பாட விதானம்.***- *கிரகித்தல்.*- எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

(i) தேசிய பொருளாதார அபிவிருத்தியில் சிறியதொழில் முயற்சிகள் அபிவிருத்தி துறையின் முக்கியத்துவத்தினை அறிந்துகொள்ளல்.

(ii) தேசிய அபிவிருத்திக்கு பொருந்தக்கூடிய வகையில் வர்த்தக வாய்ப்புக்களை இனங் காணல்.

(iii) பிரதேச ரீதியாகக் காணப்படும் வளங்கள் மற்றும் தேசிய, சர்வதேச சந்தை வாய்ப்பினை இனங்கண்டு அதற்கிணங்க தொழில் முயற்சியாளர்களுக்கு வழிகாட்டல்.

(iv) முயற்சியாண்மை(தொழில் முயற்சிகள்) ஆற்றல் கொண்டவர்களை அடையாளங் கண்டு அவர்களை சிறியதொழில் முயற்சிகள் துறையில் ஈடுபடுத்தல்.

(v) சிறிய மற்றும் நுண்பாகவர்த்தகம் தொடர்பான அறிவு.

(vi) தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் ஏனைய நிதி மற்றும் துணைச் சேவைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்.

(vii) இளைஞர், யுவதிகளை தொழில் முயற்சித் துறைக்காக ஊக்கப்படுத்தல், அவர்களிடத்தில் மனப்பாங்கு ரீதியிலான மாற்றத்தினை ஏற்படுத்தல் மற்றும் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

(viii) வர்த்தக நடவடிக்கைகளின்போது வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான வர்த்தகத் திட்டமிடல், செயற் திட்டங்களை தயாரித்தல்.

(xiv) வர்த்தகத் தகவல்களை சேகரித்தல் மற்றும் தேவையானவர்களுக்கு தகவல்களை வழங்குதல்.

***நுண்ணறிவுச் சோதனை.***- பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிக்க வேண்டிய 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

வாக்கியங்கள், எண்ணிக்கை மற்றும் உருவ அமைப்புக்கள் ஊடாக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் முடிவுகள் மற்றும் பிரதிபலிப்புகளைப் பரீட்சிப்பதன் மூலம் விண்ணப்பதாரிகளின் புரிந்துகொள்ளும் ஆற்றல் மற்றும் நுண்ணறிவைச் சோதனை செய்வதனையே எதிர்பார்க்கப்படுகின்றது.

8.5 ***தொழில்சார் நிபுணத்துவப் பரீட்சை.***- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடையே திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் தொழில்சார் நிபுணத்துவப் பரீடசைக்கு அழைக்கப்படுவார்கள். தொழில்சார் நிபுணத்துவப் பரீட்சைக்குத் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படுவதுடன், அதன்போது வழங்கப்படும் புள்ளிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | *புள்ளிகள்* |
|---|---|
| முன்வைக்கும் ஆற்றல் | 30 |
| தகவல் தொழிநுட்ப அறிவுச் சோதனை | 20 |
| மொத்தம் | 50 |

9.

(i) ***பரீட்சைக் கட்டணம்.***- பரீட்சைக் கட்டணம் ரூபா1,200 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு மாத்திரம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (அதன் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும்) பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தினாலும் மீளச் செலுத்தப்படவோ பிறிதொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

(ii) இந்த அறிவித்தலில் 8.3 ஆம் பந்திக்கமைய எழுத்து மூலப் பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளை 8.5 பந்திக்கமைய தொழில்சார் நிபுணத்துவப் பரீட்சைக்கு உட்படுத்தியதன் பின்னர் அந்த இரண்டு பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் இறுதிப் பெறுபேறுகள் வெளியிடப்படும். தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இறுதிப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள், தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் ஊடாக வெளியிடப்படும்.

10. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப் படிவம் A 4 (22 x 29செ.மீ.) (சாதாரண ஹார்ப்சீட்) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(i) இலக்கம் 01 – 03 பந்திகளை முதலாவது பக்கத்திலும்

(ii) இலக்கம் 04 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கங்களில் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பப் பத்திரத்தை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்படாத மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவானதா என்பதனை விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.அவ்வாறில்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக்கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயரை சிங்கள மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

11. பரீட்சைக்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2017.04.11 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக “முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016 (2017)” எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. 1503,
கொழும்பு.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்தில் பணி புரியும் விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை அந்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாகவும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், தாம் வசிக்கும் பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ஒன்றிணைந்த வருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் போன்றோரில் ஒருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் திகதியன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை முன்வைத்தல் வேண்டும்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதிப் பத்திரத்தை அனுப்பிவைப்பார். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடனேயே அது பற்றி செய்திப் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களுக்குப்

*பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புமற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தான் விணணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அந்த விபரங்களுடன் தொலைநகல்(பெக்ஸ்) மூலமாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்பிவைப்பதன் ஊடாக வினவுதல் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்வதற்காக தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பியபோது வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தம்மிடம் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்.*

*14. பரீட்சாரத்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;*
(ii) *செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.*

*15. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக உண்மையான தகவல்களையே வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய எவரேனுமொரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதெனத் தெரியவரும்போது அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்ய முடியும். விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படும். விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படல் கூடாது. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டியேற்படும்.*

*16. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொது சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.*

*17. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கியிருத்தல் வேண்டும்.*

எம். ஐ. எம். ரபீக்,
செயலாளர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

***தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கள நிலை /அலுவலகப் பிரிவு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)***

Open Competitive Examination for Recruitment to the Post of Entrepreneurship Development Training Officer – Grade II, in Field / Office Category 2 in the Ministry of National Policies and Economic Affairs- 2016(2017)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

*சிங்களம் - 2*
*தமிழ் - 3*
*ஆங்கிலம் - 4*

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

*அலுவலை மேற்கொள்ளும்போது தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மொழி ஊடகம்

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | - 2 | எழுத்தில் | |
| தமிழ் | - 3 | இலக்கத்தில் | |

1.

1.1 முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக குறிப்பிடப்படும் பெயரை ஆரம்பத்திலும் முதலெழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம்: GUNAWARDHANA, H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 கையடக்கத் தொ.பேசி இல. :----.

3.

3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

3.2 பிரதேச செயலகப் பிரிவு :----.

3.3 வதியும் காலப் பகுதி :----.

3.4 கிராம அலுவலர் பிரிவு :----.

4.

4.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.2 2017.04.11ஆம் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4.3 சிவில் அந்தஸ்து :
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

05. கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

06. பட்டம் பற்றிய விபரம் :

(i) பட்டம் :----.
(ii) பல்கலைக்கழகம் :----.

07. தொழில் தகைமைகள்:

(i) :----.
(ii) :----.
(iii) :----.

08. நீங்கள் குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டில்√அடையாளத்தை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

('ஆம்' எனில் விபரத்தைக் குறிப்பிடவும்) :----.

09. பரீட்சைக் கட்டணம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கம், திகதி :----.
(iii) செலுத்திய தொகை ரூபா :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச் சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்) |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதியை பூரணப்படுத்தாமல் மற்றும்/ அல்லது தவறான முறையில் பூரணப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும், இதில் சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டால் பணி நீக்கத்திற்கு ஆளாகுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றிக்கொள்ள மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் எனவும், அந்த வைப்புச் சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

**குறிப்பு**.- அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவர், தாம் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ஒன்றிணைந்த வருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் போன்றோரில் ஒருவரால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3-423/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.